Australian Government

Department of Home Affairs

# Privacy notice Visitors to immigration detention facilities

# தகவல் பாதுகாப்பு அறிவிப்பு குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு வரும் வருகையாளர்கள்

Form

1553 TAM

TAMIL

The Department of Home Affairs ('உள்-நாட்டு விவகாரத் திணைக்களம்')-இல் Australian Border Force ('அஸ்திரேலிய எல்லைப் பதுகாப்புப் படை')-யும் உள்ளடங்கும். *Privacy Act 1988 (தனியுரிமைச் சட்டம் 1988)* (தகவல் பாதுகாப்புச் சட்டம்) ஒரு தனிநபரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கும் போது, அதைத் திணைக்களம் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இந்த படிவம் குடிவரவு தடுப்பு வசதிகளுக்கு நீங்கள் வருகை தரும்பொழுது அது தொடர்பான உங்களுக்கான அறிவிப்பாகும்.

## தகவல் பாதுகாப்பு சட்டம்

'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் 'சட்ட இணைப்பு 1'-இல் உள்ள ('ஆஸ்திரேலியத் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்' (APPs))-இனால் The Department of Home Affairs ('உள்-நாட்டு விவகாரத் திணைக்களம்') கட்டுப்படுத்தப்படுகிறது. ஒருவரைப் பற்றிய தகவல்களை நாங்கள் எப்படித் திரட்டுகிறோம், பயன்படுத்துகிறோம், இருப்பில் வைக்கிறோம், மற்றும் வெளிப்படுத்துகிறோம் என்பதையும், எங்களிடம் உள்ள உங்களைப் பற்றிய தகவகல்களை நீங்கள் அணுகிப் பெற, அல்லது அவற்றில் திருத்தங்களை ஏற்படுத்த நீங்கள் எவ்வாறு நாடலாம் என்பதையும் APPs எனும் கொள்கைகள் நெறிப்படுத்துகின்றன.

'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தினைத் தம்மால் ஒப்பந்தப்படுத்தப்படும் சேவை வழங்குநர்களும் பின்பற்றியொழுக வேண்டுமென 'திணைக்களம்' வேண்டுகிறது.

உணர்வார்ந்த தகவல்களின் திரட்டலைத் 'திணைக்களம்' அனுமதிக்கும் தருவாய்கள்:

- உணர்வார்ந்த தகவல்கள்:
  - 'பொதுவாக அனுமதிக்கப்படும் சூழல்' ஒன்றில், (எவ்வொரு நபரது உயிர், உடல்நலம் அல்லது பாதுகாப்பிற்கு, அல்லது பொது சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு ஏற்படும் ஆபத்தினை மட்டுப்படுத்த அல்லது தடுக்க)
  - உங்களுடைய சம்மதத்துடன் ('திணைக்கள'த்தினது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயல்பாடுகள் அல்லது நடவடிக்கைகளுக்காக இந்தத் தகவல் திரட்டல் நியாயமான முறையில் அவசியப்படும் பொழுது, அல்லது அவற்றுடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாக இத் தகவல் திரட்டல் இருக்கும் பொழுது)
  - ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால், அல்லது நீதிமன்றம் அல்லது மீளாய்வு மன்றம் ஒன்றின் உத்தரவு ஒன்றினால் வேண்டப்படும் பொழுது அல்லது அவற்றினால் அதிகாரம் அளிக்கப்படும் பொழுது
  - 'திணைக்கள'த்தினால் அல்லது 'திணைக்கள'த்தின் சார்பாக மேற்கொள்ளப்படும் சட்ட அமலாக்க நடவடிக்கைகளுக்காக
- 'திணைக்கள'த்தினது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயல்பாடுகள் அல்லது நடவடிக்கைகளுக்காக இந்தத் தகவல் திரட்டல் நியாயமான முறையில் அவசியப்படும் பொழுது, அல்லது அவற்றுடன் நேரடியாக சம்பந்தப்பட்டதாக இத் தகவல் திரட்டல் இருக்கும் பொழுது ஒருவரைப் பற்றிய மற்ற தகவல்கள் திரட்டப்படும்.

உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் ('திணைக்களம்') ஏன் திரட்டுகிறோம், மற்றும் குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையம் ஒன்றிற்கு வருகை தருவது சம்பந்தமாக இத் தகவல்களை நாங்கள் எவ்வாறு நிர்வகிப்போம் என்பதை இந்த அறிவிப்பு விளக்கிச் சொல்கிறது. ஒருவரைப் பற்றிய தகவல்களை நாங்கள் கையாளும் செயல்முறைகள் குறித்த மேலதிகத் தகவல்களை **https://www.homeaffairs.gov.au/access-and-accountability/our-commitments/privacy** எனும் வலைத்தலப் பக்கத்தில் கிடைக்கும் 'திணைக்கள'த்தினது தகவல் பாதுகாப்புக் கொள்கையிலிருந்து நீங்கள் பெறலாம்.

பின் வருவனவற்றைப் பற்றிய தகவல்களை இந்தத் தகவல் பாதுகாப்புக் கொள்கை கொண்டிருக்கும்:

- 'திணைக்களம்' இருப்பில் வைத்திருக்கும் உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் எவ்வாறு அணுகிப் பெறலாம், மற்றும் எவ்வாறு அவற்றில் திருத்தங்களை ஏற்படுத்தலாம்
- தகவல் பாதுகாப்பு மீறல் ஒன்றைப் பற்றி நீங்கள் எவ்வாறு முறைப்பாடு செய்யலாம், மற்றும் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான 'திணைக்கள'த்தினது செயல்பாட்டு முறைகள்.

## உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் ஏன் திரட்டுகிறோம்

குடிவரவுத் தடுப்புக்காவலை நிர்வகிப்பது சம்பந்தப்பட்ட 'திணைக்கள'த்தினது செயல்பாடுகள் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, *Migration Act 1958 ('புலப்பெயர்வு சட்டம் 1958')*- இன் கீழ் ஒருவரைப் பற்றிய தகவல்களை சேகரிப்பது எமது பிரதான நோக்கமாகும். தகவல்கள் சேகரிக்கப்படுவதற்கான பிரதான நோக்கத்திற்காக, 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் கீழ், உங்களைப் பற்றிய தகவல்களைப் பயன்படுத்த அல்லது வெளிப்படுத்த நாங்கள் அனுமதிக்கப்படுகிறோம்.

'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் கீழ், இரண்டாம்-நிலை நோக்கங்களுக்காகவும் தகவல்கள் பயன்படுத்தப்படலாம் அல்லது வெளிப்படுத்தப்படலாம். பின் வரும் தருணங்களில், பின் வரும் தருணங்களில்,

- உங்களுடைய சம்மதத்துடன் இப்படிச் செய்யப்படலாம்
- உங்களைப் பற்றிய தகவல்களைத் 'திணைக்களம்' பயன்படுத்தலாம் அல்லது வெளிப்படுத்தலாம் என்று நியாயமான முறையில் நீங்கள் எதிர்பார்க்கும் பொழுது, மற்றும் இரண்டாம் நிலை நோக்கமானது (உணர்வார்ந்த தகவல்களைப் பொறுத்த விடயத்தில்) பிரதான நோக்கத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது, அல்லது இரண்டாம்-நிலை நோக்கமானது (ஒருவரைப் பற்றிய மற்ற தகவல்களைப் பொறுத்த விடயத்தில்) பிரதான நோக்கத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது
- ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால், அல்லது நீதிமன்ற/மீளாய்வு மன்ற உத்தரவு ஒன்றினால் தகவல்களின் பயன்பாடு அல்லது வெளிப்பாடு வேண்டப்படும் பொழுது, அல்லது அதற்கான அதிகாரம் அளிக்கப்படும் பொழுது
- 'அனுமதிக்கப்படும் பொதுவான சூழல்' ஒன்றில் (ஒரு நபரது உயிர், உடல்நலம் அல்லது பாதுகாப்பிற்கு, அல்லது பொது சுகாதாரம் அல்லது பொதுப் பாதுகாப்பிற்கு ஏற்படும் பாரதூர அச்சுறுத்தலை மட்டுப்படுத்த அல்லது தடுக்க அவசியம் ஏற்படும் தருணங்கள் போன்ற சூழல்களில்)
- சட்ட அமலாக்கம் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காக.

பின் வருவனவற்றின்/பின் வருவோரின் பாதுகாப்பு, நல்லொழுங்கு ஆகியவற்றினைப் பராமரிக்கும் நோக்கங்களுக்காக 'திணைக்கள'மானது அதனால் ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள சேவை வழங்குநர்கள் மூலமாக உங்களைப் பற்றிய தகவல்களை உங்களிடமிருந்து திரட்டும்:

- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையம் ஒன்று
- குடிவரவுத் தடுப்புக்காவல் வலையமைப்பு, மற்றும்/அல்லது
- குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையத்தின் ஊழியர்கள், அங்கு தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர்கள் மற்றும் வருகையாளர்கள்

சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட ஆபத்துகளை அடையாளம் கண்டு அவற்றை கட்டுப்படுத்துவதும், தொற்று நோய்களின் பரவலைத் தடுக்க அல்லது அதைக் கட்டுப்படுத்துவதற்காகத் தக்க கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதும் இதில் உள்ளடங்கும்.

*Work Health and Safety Act 2011* (Cth) (WHS Act) (*'பணிச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டம் 2011* (Cth) (WHS Act)) - இன் 'பகுதி 2'-இல் உள்ள சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கடமைகளின் கீழ், நியாயமான முறையில் நடைமுறைக்கேற்ற அளவிற்கு தனது பணியாளர்கள் மற்றும் இதர ஆட்களின் சுகாதாரம் மற்றும் பொது நலத்தினைப் பாதுகாப்பதற்கான தனது கடப்பாட்டினை நிறைவேற்ற 'திணைக்கள'த்திற்கு இந்தத் தகவல்கள் உதவும்.

## உங்களைப் பற்றிய தகவல்கள் 'திணைக்கள'த்தினால் திரட்டப்படவில்லையேல், அதனால் ஏற்படும் பின் விளைவுகள்

உங்களைப் பற்றிய தகவல்கள் 'திணைக்கள'த்தினால் திரட்டப்படவில்லையானால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையம் ஒன்றிற்கு வருகை தருவதற்கான, அல்லது குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ள நபர் ஒருவரைப் பார்ப்பதற்கான உங்களுடைய விண்ணப்பத்தினைச் செயல்முறைப்படுத்த இயலாது.

© COMMONWEALTH OF AUSTRALIA, 2022

## உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் திரட்டும் விதம்

பொதுவாக, வருகையாளர் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும், மற்றும்/அல்லது குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையங்களில் உள்-நுழைவுச் சோதனைகளை மேற்கொள்ளும் ஒப்பந்தப்படுத்தப்பட்டுள்ள சேவை வழங்குநரது ஊழியர்களால் உங்களைப் பற்றிய தகவல்கள் 'திணைக்கள'த்தின் சார்பாகத் திரட்டப்படும். பொதுவாக, தகவல்கள் உங்களிடமிருந்து நேரடியாகத் திரட்டப்படும்.

உங்களைப் பற்றிய தகவல்கள் திரட்டப்படுவதை அனுமதிப்பது சுயவிருப்பாகும், ஆனால், உங்களைப் பற்றிய தகவல்கள் 'திணைக்கள'த்தினால் திரட்டப்படவில்லை என்றால், குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையம் ஒன்றிற்கு வருகை தருவதற்கான, அல்லது குடிவரவுத் தடுப்புக்காவலில் உள்ள நபர் ஒருவரைப் பார்ப்பதற்கான உங்களுடைய விண்ணப்பத்தினைச் செயல்முறைப்படுத்த இயலாது.

குடிவரவுத் தடுப்புக் காவல் நிலையத்திலுள்ள பதிவேடு ஒன்றில் உங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படும், மற்றும் 'திணைக்கள'த்தினது செயல்பாடுகள் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, அல்லது மற்றபடி ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால் அனுமதிக்கப்படும் பொழுது 'திணைக்கள'த்தின் மற்ற பகுதிகளுக்கு அவை கொடுக்கப்படலாம்.

குடிவரவுத் தடுப்புக்காவல் நிலையம் முழுதும் 'உள்-சுற்று தொலைக்-கண்காணிப்பு" (Closed-circuit television (CCTV)) தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கக் கூடும். CCTV கண்காணிப்பு எதன் காரணமாகவும் உங்களுடைய படம் அல்லது பேச்சு ஆகியன பதிவு செய்யப்படலாம். CCTV கண்காணிப்பு மூலமாகப் பெறப்பட்ட கேஒளொலிகள் அல்லது காணொலிகள் இரகசியமான முறையில் கையாளப்படும், மற்றும் மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காக, அல்லது மற்றபடி ஆஸ்திரேலிய சட்டம் ஒன்றினால் வேண்டப்படும் பொழுது அல்லது அதிகாரம் அளிக்கப்படும் பொழுது மட்டுமே அவற்றைப் பயன்படுத்தவோ, வெளிப்படுத்தவோ இயலும்.

## உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் யாருக்கு வெளிப்படுத்துவோம்

உங்களைப் பற்றிய தகவல்கள் இரகசியமான முறையில் கையாளப்படும், மற்றும் இந்த 'அறிவிப்'பில் கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, அல்லது மற்றபடி 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தினால், அல்லது வேறொரு ஆஸ்திரேலிய சட்டத்தினால் வேண்டப்படும் பொழுது அல்லது அனுமதி அளிக்கப்படும் பொழுது மட்டுமே அவை பயன்படுத்தப்படும், அல்லது வெளிப்படுத்தப்படும்.

ஆஸ்திரேலிய சட்டம் என்பது பொது-நல அரசு, மாநில அரசு அல்லது எல்லைப்-பிரதேச அரசு ஒன்றின் ஒரு சட்டமாகும்.

உங்களுடைய வருகையாளர் விண்ணப்பத்தினை மதிப்பீடு செய்தல், அல்லது குற்றச் செயல் ஒன்றைத் தடுத்தல், அதைக் கண்டுபிடித்தல், ஆய்வு செய்தல் மற்றும் அதை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்துதல் அல்லது அதற்கான தண்டனை அளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கும் சட்ட அமலாக்கம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்கான அவசியம் ஏற்படும் தறுவாய்களில், 'ஆஸ்திரேலிய ஃபெடரல் காவல்துறை' மற்றும்/அல்லது ஒரு மாநில அல்லது எல்லைப்-பிரதேச காவல்துறை அல்லது சேவை போன்ற ஆஸ்திரேலிய (பொது-நல அரசு, மாநில மற்றும் எல்லைப்-பிரதேச அரசு) சட்ட அமலாக்க முகமைகளுக்கு உங்களைப் பற்றிய தகவல்களைத் 'திணைக்களம்' வெளிப்படுத்தக் கூடும்.

சுகாதாரம் மற்றும் 'உயிரியல்-பாதுகாப்பு' (biosecurity) சட்டங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பு ஒன்று உள்ள பொது-நல அரசு, மாநில மற்றும் எல்லைப்-பிரதேச அரசு முகமைகளுக்கு உங்களைப் பற்றிய தகவல்களை நாங்கள் வெளிப்படுத்தக் கூடும்.

## கடல்-கடந்த நாடுகளில் உள்ள பெறுநர்களுக்கு ஒருவரைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துதல்

உங்களுடைய சம்மதம் இல்லாமல், அல்லது 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் 'சட்ட இணைப்பு 1-இல் உள்ள APP 6 மற்றும் APP 8 -இனால் அனுமதிக்கப்படாமல், கடல்-கடந்த நாடு ஒன்றில் உள்ள பெறுநர் ஒருவருக்கு உங்களைப் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்படாது.

## உங்களைப் பற்றிய தகவல்களை நீங்கள் எவ்வாறு அணுகிப் பெறலாம் அல்லது அவற்றில் திருத்தம் ஏற்படுத்தலாம்

*Freedom of Information Act 1982* (Cth) *(தகவலறியும் சுதந்திர சட்டம் 1982)* மற்றும் 'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் கீழ் உங்களைப் பற்றிய தகவல்களை அணுகிப் பெறுவதற்கான, அல்லது அவற்றில் திருத்தம் ஏற்படுத்துவதற்கான வேண்டுகோள் ஒன்றினை நீங்கள் விடுக்கலாம். எம்மிடம் வைக்கப்பட்டுள்ள உங்களைப் பற்றிய தகவல்களை அணுகிப் பெறவும், அவற்றில் திருத்தம் ஏற்படுத்தவும் நீங்கள் எவ்வாறு நாடலாம் என்பதை எமது 'தகவல் பாதுகாப்புக் கொள்கை' விளக்கிச் சொல்கிறது.

## கரிசனக்-கவலைகள் மற்றும் முறைப்பாடுகள்

'தகவல் பாதுகாப்பு சட்ட'த்தின் பிரகாரம் 'திணைக்கள'த்தின் மீது நம்பிக்கை வைத்து அதன் பொறுப்பில் விடப்பட்டுள்ள ஒருவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதில் 'திணைக்களம்' பற்றுறுதி கொண்டுள்ளது. APPs-இல் சொல்லப்பட்டுள்ள எமது கடப்பாடுகளை மீறும் ஒரு விதத்தில் உங்களைப் பற்றிய தகவல்களைத் 'திணைக்களம்' கையாண்டிருப்பதாக நீங்கள் நம்பினால், முறைப்பாடு ஒன்றை நீங்கள் எப்படிச் செய்யலாம் என்பதையும், உங்களுடைய முறைப்பாட்டினை நாங்கள் எவ்வாறு கையாளுவோம் என்பதையும் எமது 'தகவல் பாதுகாப்புக் கொள்கை' விளக்குகிறது.

## எம்முடன் நீங்கள் எவ்வாறு தொடர்புகொள்ளலாம்

முழு தொடர்பு விபரங்களையும் 'திணைக்கள'த்தினது வலைத்தலத்தில் காணலாம்: **www.homeaffairs.gov.au**

மாறாக, உங்களுடைய பின்னூட்டல்களை நீங்கள் பின் வரும் வழிகளில் அளிக்கலாம்:

- இணைய-வழிப் படிவத்தினைப் பயன்படுத்தி
- பின் வரும் முகவரிக்கு எழுத்து மூலமாக:
  The Manager Global Feedback Unit
  GPO Box 241
  Melbourne VIC 3001 Australia


© COMMONWEALTH OF AUSTRALIA, 2022